# ஆயர் மடல்…..

அன்புக்குரியவர்களே,

**கிறிஸ்தேசுவின் உயிர்த்தெழுந்த திருநாள் வாழ்த்துக்கள்**

## HAPPY EASTER !

சிலுவையில் அறையப்பட்ட இயேசு முடிந்துவிட்டார், அவரையும், அவரது ஊழியத்தையும் முடித்துக்கட்டி விட்டோம் என்று நினைத்தவர்களுக்கு இயேசுவின் உயிர்தெழுதல், இதுநாள் வரை கடைபிடுத்துவந்த பழைய ஏற்பாட்டிலிருந்து, ஒரு புதிய ஏற்பாட்டின் துவக்கம் ஆரம் பமாகிவிட்டது என்பதை பவுல் போன்ற மனம் திரும்பிய யூதர்கள் கண்டு கொண்டார்கள். மனிதனாய் இருந்த இயேசுவுக்கும், உயிர்த்தெழுந்த இயேசுவுக்கும் இருந்த வித்தியாசத்தை கண்களால் கண்ட சீஷர்கள் நித்ய வாழ்வு தான் நிலையானது என்பதை கண்டு கொண்டு பூலோக நிலையற்ற வாழ்வையோ உயிர்த்தெழுந்த இயேசுவுக்கு ஊழியம் செய்ய ஒப்புக்கொடுத்தார்கள். இவ்வாறு புதிய துவக்கத்தை ஏற்படுத்திய இயேசுவின் உயிர்த்தெழுதல், நம்முடைய வாழ்விலும் இந்த உயிர்த்தெழுந்த பண்டிகை யில் ஒரு மாபெரும் புதிய துவக்கத்தை உண்டாக்குவாராக!

இந்த புதிய துவக்கம் நமது தனிப்பட்ட வாழ்விலும், குடும்ப, சமுதாய, திருச்சபை வாழ்விலும் பெரிய எழுப்பு தலை கொண்டு வருவதாக. ஈஸ்டர் ஆராதனை, VBS, CHURCH DAY மற்றும் ANNUAL GENERAL BODY மீட்டிங்கில் கலந்து கொள்ள உற்சாகத்தோடு முன்வாருங்கள்.

இப்படிக்கு,
உங்கள் ஆயர்,
Rev. Christopher Rajendran

# *Meditation* (தியானம்)

***"உயிரோ டிருக்கிற இயேசுவை மரித்தோரிடத்தில் தேடுதல்"***

**தியான வசனம்**: லூக்கா 24 : 5b – 6a (LUKE 24:5b to 6a)

அன்பிற்குரியவர்களே,

மனித குல வரலாற்றின் ஒரு புதிய நிகழ்வு தான் இயேசுகிறிஸ்துவின் உயிர்த்தெழுதல். இதை அப்போஸ் தலர்களே சரியாக புரிந்து கொள்ளாத போது, சாதாரண பெண்மணிகள் எவ்வாறு புரிந்துகொள்வார்கள்? இயேசுவின் இறந்த உடலுக்கு இறுதி மரியாதை செலுத்தவும், சிறப்பாக யூத முறைப்படி இறந்த உடலுக்கு கந்தவர்க்கங்களை கொண்டு நல்லடக்கம் செய்யவும், பெண் சீடர்கள் அதிகாலை கல்லறைக்கு வருகிறார்கள். அப்பொழுது இரண்டு தேவதூதர்கள் பயப்பட்டு நின்ற அந்த பெண்களிடம் சொன்ன வார்த்தைகள், இயேசு பிறந்த பொழுது தேவதூதர்கள் சொன்ன வார்த்தைகளைப் போல, மரித்துப்போன மனித குலத்திற்கு நம்பிக்கையளிக்கும் வார்த்தைகள், உயிர்ப்பிக்கும் வார்த்தைகள். தேவ தூதர்கள் சொன்ன வார்த்தைகளுக்கு சரியான அர்த்தத்தை சற்று ஆழமாக தியானித்து தான் சரியாக புரிந்து கொள்ள வேண்டும். வேத சத்தியம் இன்றைய நிகழ் காலத்திற்கும் பொருத்தமாக இருப்பதால் தான், அழியாமல் நிலைத்திருக் கிறது. இந்த காலத்திலும் நம் மனித வாழ்விற்கு அர்த்தத் தையும், ஆற்றலையும், புதிய பரிமாணத்தையும் கொடுக் கிறது. இயேசுவின் சரீரத்தை சிலுவையில் அறைந்து சிதைத்தாலும், அவரை கொன்றாலும், தன்னுடைய மரணத்தினால், மரணத்திற்கு அதிகாரியான பிசாசானவனை வென்று, பாதாளத்தை ஜெயித்து, பிதாவின் சமூகத்திலே

பிரவேசிக்க, நித்ய மகிமையான வாழ்வை சுதந்தரிக்க விசுவாச பாவிகளாகிய நம்மை ஆவியிலே உயிர்ப்பித் திருக்கிறார். நம்முடைய நிலையற்ற பூலோக வாழ்விற்கு புத்துயிரை, புதிய உயிர்த்தெழுந்த வல்லமையை கொடுத்தி ருக்கிறார். நிலையற்ற நம்மை நிலையான நித்யத்தோடு இணைத்திருக்கிறார். ஆதலால் உயிர்த்தெழுந்த இயேசுவை எங்கே, எப்படி தேட வேண்டும்?

***மரித்தோரிடத்தில் இயேசுவை தேடுவது அறியாமை***:

இயேசு மரித்தார் என்பது வரலாற்று உண்மை! ஆனால் மரணமும், பாதாளமும் இயேசுவை 3 நாட்களுக்கு மேல் கட்டுப்படுத்தி வைக்க அவர் சாதாரண மனிதனல்ல, அவர் சர்வ வல்லமையுள்ள தெய்வம். **LORD JESUS CHRIST IS ALMIGHTY GOD.** அவர் பலமாய் நிருபிக்கப்பட்ட தேவ குமாரனுமாயிருக்கிறார். ஆதலால் சதா காலங்களிலும் உயிரோடிருக்கிற இயேசுவை, அவர் இருக்கிற இடத்தில தேடவேண்டும். இந்த உலகில் கோடிக்கணக்கான மக்கள் அவர் இல்லாத சிலைகளிலும், மலைகளிலும், மார்க்கங் களிலும், மரண வழிகளிலும் தேடிக்கொண்டிருக் கிறார்கள். இவ்வாறு தேடினால் உயிரோடிருக்கிறவரை எக்காலத் திலும் காண முடியாது. முடிவில் பெருத்த ஏமாற்றமே மிஞ்சும்.

***தேவனுடைய வலதுபாரிசத்திலே இருக்கிற இயேசுவை தேடுவதே மெய்யான ஞானம் :***

உன்னதங்களில் வீற்றிருக்கின்ற, மாம்சகண்களினால் பார்க்க முடியாத இயேசுவை எவ்வாறு தேடுவது? கொலோசியர் 3 ம் அதிகாரத்தின் படி மேலான பரலோக ராஜ்ஜியத்திற்குரியவைகளை நாடி தேடும் பொழுது, அங்கு

வீற்றிருக்கின்ற உயிர்த்தெழுந்த இயேசுவை விசுவாச கண்களினால் தரிசிக்க முடியும். பூமிக்குரிய வைகளில் இயேசுவை தேடுவது அறிவீனம். தேவ ராஜ்ஜியத்திற் குரியவைகளில் அவரை தேடுவது மெய்ஞ்ஞானம். தேவ சித்தங்களை நிறை வேற்றுவதில் அவரை தேடுவது மெய்ஞ்ஞானம்(1JOHN 2:15,16). வசனத்தினாலும், விசு வாசத்தினாலும், நாவினாலுமல்ல, கிரியையினாலும், உண்மையான விசுவாசத்தினாலும் தேவனையும், பிறரையும் அன்புகூருவோம். உயிர்த்தெழுந்த இயேசுவுக்கு பிரியமாய் நடந்து கொள்வோமானால்! மெய்யாகவே நாம் அவரை திருச்சபையின் ஐக்கியத்தில் தேடி கண்டடைவோம்.

**ஆன்புடன்.**
**உங்கள் ஆயர்**

Rev. Christopher Rajendran.

## Projects for March 2018

### **Congregation**:

உயிர்த்தெழுந்த இயேசுவின் 40 DAYS தரிசனத்தைப் பற்றி ஒருபக்க அளவில் எழுதுக.

### Womens fellowship:

ஆதி திருச்சபையின் வளர்ச்சியில் பெண்களின் பங்கு பற்றி விவாதம். (WOMENS DAY)

**Mens Fellowship:**

ஆதித்திருச்சபையின் துவக்கம் பற்றி விவாதம்.

**Youth Fellowship:**

***'YOUTH RETREAT'***

**Junior Church**:

*DRAW CHRIST'S CEMETRY AND HIS RESURRECTION.*

****************************

## ***A special felicitation from our first Pastor***

# பாராட்டுக்கள்!!!

கிறிஸ்துவுக்குள் எனக்கு மிகவும் பிரியமான அலைன் திருச்சபை ஆயர், உப தலைவர், சபைக்குழு செயலர் மற்றும் உறுப்பினர்களே திருச்சபை மக்களே, பிள்ளைகளே, உயிர்த்து இன்றும் நம்மோடு வாழும் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் உங்கள் அனைவருக்கும் எங்களது மனமார்ந்த வாழ்த்துக்களைக் கூறிக்கொள்கிறேன். நமது திருச்சபை தனியாக்கம் பெற்று பத்து ஆண்டுகள் நிறைவு பெறும் இத்தருவாயில் கடிதம் மூலம் உங்களை சந்திப்பதிலும் வாழ்த்துவதிலும் பெருமகிழ்ச்சியடைகிறேன். இம்மட்டும் காத்து நடத்தி வளர்த்திய இறைவனுக்கு ஸ்தோத்திரம் செலுத்துகிறேன்.

ஆயர் மண்டல திருச்சபையாய் அனைவரும் ஒருங்கிணைந்து ஆண்டவருக்கென உண்மையாய்

தரிசனத்தோடு ஊழியம் செய்யவும், வறியவர்களிடம் கரிசனை காட்டி தேவ அன்பை ஊட்டி, காலா காலங்களில் தேவன் தந்த ஊழியர்களை வெகுவாய் ஆதரித்து பத்தாண்டு காலம் நடத்தினார். குறிப்பாக சொல்லப்போனால் கடந்த பத்தாண்டைய திருச்சபையின் ஊழியத்தை தேவன் மிக மிக அதிகமாக ஆசீர்வதித்திருக்கிறார். தனியாக்கம் பெற்ற திருச்சபையின் முதல் போதகராக திருப்பணி செய்ய தேவன் எனக்கு வாய்ப்பு தந்தார்.

அன்று கைவிரல்களால் எண்ணுமளவிற்குரிய மக்கள் தான் இருந்தார்கள். திருச்சபையாரின் ஜெபம், ஈகை, ஒற்றுமை, கடுமையான உழைப்பு, ஊழியம் இவை மூலமாய் திருச்சபை வளர்ந்தது. இன்று மிஷனரிகளைத் தாங்கும் திருச்சபையாக, ஏழைகளை உதவும் திருச்சபையாக மாறி புதிய புதிய ஊழிய தரிசனங்களை தேவனிடமிருந்து நீங்கள் பெற்றிருப்பதை அறிந்து தேவனை துதிக்கிறேன் உங்களை பாராட்டுகிறேன். நாம் பெற்ற உயர்வுகள் அனைத்தும் தேவனுடைய அருட்கொடையே என்ற உணர்வு மிகத் தேவை. புதிய குடும்பங்கள், நபர்கள் இத்திருச்சபையின் ஐக்கியத்திலே இணைந்து திருச்சபை வெகுவாய் வளர்ந்திருக்கிறது என்பதும் எனக்கு மிக்க மகிழ்வைத் தருகின்றது. எனக்கும் என் மனைவி, பிள்ளைகளின் வாழ்க்கையிலும் ஒரு போதும் மறக்க முடியாத தாக்கத்தை உண்டாக்கிய திருச்சபை அலைன் திருச்சபையே. நல்ல உள்ளங்கள் கொண்ட என் உடன் பிறவா சகோதர சகோதரிகளை தேவன் தந்தார். உண்மையாய் சொன்னால் அலைன் ஊழிய நாட்கள் எங்களுக்கு ஒரு போதும் மறக்க முடியாது. இத்திருச்சபைக்காக திருச்சபை மக்களுக்காக நாங்கள் தினமும் ஜெபிப்பதுண்டு கடந்து வந்த பாதைகளை திரும்பிப் பார்த்து ஊழியப்பாதைகளில் நீங்கள் அடைந்த

வெற்றிகளை நினைந்து தேவனைத் துதியுங்கள். தோல்விகளுக்காக மனம் வருந்தி உங்களை சமர்ப்பணம் செய்து தேவ ஆற்றலுக்காக வேண்டுங்கள், சான்றாய் வாழுங்கள். அலைன் திருச்சபை வளர்ந்து பெருகட்டும். அந்நிய தேசத்திலும் அனேகருக்கு மாதிரியான திருச்சபையாக பிரகாசிக்கட்டும். புதிய தரிசனத்தோடு புத்தாண்டிலே புது நடை போடுங்கள். எனக்கு இந்த வாய்ப்பு தந்த சபைச் செயலர் திரு. நேசமணி அவர்களுக்கு மிக்க நன்றி. மீண்டும் ஒரு முறை கூட எங்களது சபை நாள் வாழ்த்துக்கள். கர்த்தர் தாமே உங்களை ஆசீர்வதித்து பாதுகாப்பாராக!! தேவ கிருபை உங்களோடிருப்பதாக.

**இப்படிக்கு**

**அருள்திரு. இ. சுனின் ஸ்பென்ஸா.**

## பெண்கள் ஐக்கியச் சங்கம்

*அன்புக்குரிய தாய்மார்களே,*

நமக்காக உயிர்த்தெழுந்த இயேசுவின் நாமத்தில் வாழ்த்துக்கள்!

சிலுவைக்கடியில் நின்ற பெண்மணிகளைப் போல நாமும் புனித வெள்ளியில் திருப்பணிவிடைகளை செய்து கர்த்தரை மகிமைப் படுத்தியிருக்கிறோம். அந்த காலத்தில் பெண்கள் இயேசு மீது அளவற்ற அன்பு வைத்தபடியால் தான் முதலில் உயிர்த்தெழுந்த இயேசு பெண்மணிகளுக்கு காட்சிகொடுத்தார். ஆதலால் நாமும் அந்த ஆதி அன்பை இயேசுவின் மீது பொழிந்து புதிய

ஆவிக்குரிய தரிசனங்களை பெற்றுக் கொள்வோம்.

HAPPY EASTER!

***WOMENS DAY** ஆராதனைக்கு ஆயத்தமாவோம்.*

உங்கள் ஆயரம்மா.
Angel.C.

## நீண்ட ஜீவனுள்ள கேதுரு மரங்கள்:

கேதுரு மரங்கள் லேசாய் அழிவதில்லை, அது நீடித்த வாழ்வுடையது. சில கேதுரு மரங்கள் ஐந்தாயிரம் ஆண்டுகளுக்கு மேலாக பூமியிலே தொடர்ந்து கொண்டே இருக்கின்றன. **"நீதிமான் கேதுருவைப்போல வளருவான்"** என்று வேதமே சொல்லும் போது, அது தேவனுடைய பிள்ளைகளுக்கு கர்த்தர் கொடுக்கும் நித்திய ஜீவனைக்குறிக்கிறது.

நாம் நல்ல நீதிமானாக திகழ்வோமானால், உலக மரணத்தினாலும் சேதப்படுவதில்லை இரண்டாம் மரணமாகிய அக்கினியும் கந்தகமும் எரிகிற கடலகிய மரணத்தினாலும் சேதப்படுவதில்லை. நாம் நித்திய ஜீவனுள்ளவர்களாய் தேவனுடைய ராஜ்யத்தில் என்றென்றும் வீற்றிருப்போம். சங்கீதக்காரனாகிய தாவீது சொல்லுகிறார். "என் ஜீவனுள்ள நாளெல்லாம் நன்மையும் கிருபையும் என்னைத் தொடரும்: நான் காத்தருடைய வீட்டிலே நீடித்த நாட்களாய் நிலைத்திருப்பேன். (சங். 23:6).

கர்த்தர் நமக்காக இரத்தஞ்சிந்தி மரித்தது, நமக்கு ஜீவனைக் கொடுக்கம் படியாகத்தான். நாம் நீடித்த நாட்களாய் நிலைத்திருக்கும் படிக்குத்தான். இதையே வேதம் “நித்திய ஜீவன் என்றழைக்கிறது. இப்போது நாம் பாவத்தினின்று விடுதலையாக்கப்பட்டு, தேவனுக்கு அடிமையானதினால் பரிசுத்தமாகுதல் நமக்கு கிடைக்கும் பெலன் அதுவே நித்திய ஜீவன். (ரோமர் 6:2).

அன்பானவர்களே! நாம் அந்த நித்திய ஜீவனைப் பெற்றிருக்கிறோமா? என்றைன்றும் நான் கர்த்தரோடு வாழ்வேன் என்ற நம்பிக்கை நமக்கு உண்டா? நாம் கேதுரு மரத்தைப்போல சமூகத்தில் நிலை நிற்க்க வேண்டுமென்றால் இன்றைக்கே தேவனிடத்தில் நித்திய ஜீவனை கேட்டுப் பெற்றுக்கொள்வோம். “சோர்ந்து போகாமல் நற்கிரியைகளைச் செய்து, மகிமையும் கனமும் அழியாமையையும் தேடுகிறவர்களுக்கு நித்திய ஜீவனை அழிப்பார்.”

**- நெல்சன் சோபித ராஜ்.**

# வெற்றி

**வெ**ற்றி என்பது நம் அனைவலுக்கும் மிகம் ஆனந்தம் தருவதாகும். நமது உரிமை என்றும் கூறலாம். ஆனால் வெற்றி என்பது தானாக நம்மை வந்து சேர்வதில்லை. அதற்கு நாம் முயற்சிக்க வேண்டும். மாணவர்கள் ஆர்வத்தோடு படித்து வெற்றி அடைகின்றார்கள். யுத்தத்தில் வெற்றி பெற வீரர்கள் அனுதினமும் பயிற்சி செய்கிறார்கள். உலகப் பிரகாரமான அனைத்து வெற்றிக்கும் ஆர்வமும் முயற்சியும் பயிற்சியும் தேவை. அதைப் போல் ஆவிக்கரிய வாழ்கையில் வெற்றி பெறவும் இவை அனைத்தும் தேவை.

உலகம், மாமிசம் என்னும் பிசாசின் இச்சையில் இருந்து விடுபட்டு, ஆவிக்குரிய வாழ்கையில் வெற்றி பெற நாம் வேதத்தை ஆர்வத்தோடு படித்து, புரிந்து கொண்டு வாழ்கையில் எவ்வாறு பிரயோஜனப் படத்த வேண்டும்,

இதைத்தான் லூக்கா 4 : 2-14 வரையுள்ள வசனங்களில் பிசாசானவன் எவ்வாறு சோதிப்பான் சத்தியத்தைக் கொண்டு எவ்வாறு ஜெயிக்க வேண்டும், என்று இயேசு செய்து காட்டியுள்ளார். எவ்வாறு என்று பார்க்கலாம்,

1. நமது தேவைகளை அறிந்து சோதிக்கிறான் (4 : 2).
   இயேசு பசியாக இருக்கிறார் என்று அறிந்து கல்லுகளை அப்பமாக்க சொல்லகிறான். இசேுவோ தேவனுடைய வார்த்தையால் பிழைப்பான் என்கிறார் (4 : 4).
2. உலகப் பிரகாரமான பெலவீனத்ததை அறிந்து சோதிக்கிறான். (4:5-7)
   நம்முடைய படிப்பு பட்டம் பதவி செல்வம் என்னும் உலக ஆசாபாச சிற்றின்பங்களை அதன் மூலம் தேவனை விட்டு நம்மை பிரிக்க முயற்சிக்கிறான். சங்கீதம் 92:7 துன்மார்க்கன் புல்லைப் போல தழைப்பான் என்றும் 92:12-ல் நீதிமான் பனையைப்போல் செழித்து லீபனோன் கேதுருவைப் போல் வளருவான் என்று காண்கிறோம். சக மனிதனின் உலகத்திலுள்ள உயர்வைக் காட்டி நம்மை சோதிக்க இடங்கொடாதிருப்போம்.
3. ஆன்மீக குருட்டாட்டத்தை அறிந்து சோதிக்கிறான். (லூக் 4:9-13)
   நமது ஆன்மீக குருட்டாட்டத்தை அறிந்திருக்கும் பிசாசானவன், வேதத்தை நன்கு அறிந்தவன் வேதத்தை தவறாக, உலகப் பிரகாரமான அர்த்தத்தில்

வியாக்கியானம் செய்து நம்மை அறியாமைக்கு நேராக வழி நடத்தி, சரி எது தவறு எது என்று தெரியாத குருட்டாத்திற்கு நடத்திச் செல்ல வல்லவன். ஆம் இந்த நாட்களில் வேதத்தை போதிப்பதிலும் மேலாக அறபுதம், அதிசயம், தீர்க்கத்தரிசனம் என்னும் எதிர்பார்ப்புகளுக்கு நேராக வழி நடத்தப் படுவதை பார்க்கிறோம். விழித்துக் கொள்வோம். கேட்கிற ஒவ்வொரு சத்தியத்தையம் வேதம் என்கிற வெளிச்சத்தில் ஆராய்வோம். ஆவியானவர் விளக்கிக் காட்டுவார்.

**இ**யேசு கிறிஸ்து 40 நாட்கள் உபவாசித்து சாத்தானை ஜெயித்தது போல இசந்த தபசு காலத்தில் வேதத்தை ஆர்வத்தோடு முயற்சித்து படித்து, வாழ்கையில் அனுதினமும் பயிற்சி செய்து, ஆவிக்குரிய வாழ்கையில் வெற்றி வாகை சூடி சாத்தானை வென்று தேவனோடு வாழ தேவன் தாமே கிருபை செய்வாராக.

**“தேவனுடைய வார்த்தையானது ஜீவனும் வல்லமையும் உள்ளதாயும், இருபுறமும் கருக்குள்ள எந்தப் பட்டயத்திலும் கருக்கானதாயும், ஆத்துமா வையும், ஆவியையும், கணுக்களையும் ஊனையும் பிரிக்கத்தக்கதாக உருவக் குத்துகிறதாயும், இருதயத்தின் நினைவுகளையும் யோசனைகளையும் வரையறுக்கிறதாயும் இருக்கிறது.”**
(எபி. 4:12)

*Mrs.Vasantha Davidraj.*

# “Charlie Won’t Go”

Charlie, George and Cliff had been going fishing together since they were little boys. They all could remember walking along the dirt path to the small lake near the small town where they were raised, carrying their

poles and tackle boxes to fish the day away. Most of the time, it wasn't about fishing at all but being together and becoming closer buddies. Some guys don't stay friends after they get older but Charlie, George and Cliff stayed good pals all the way into high school. When they could drive, they often borrowed one of their parent's cars and went fishing at a lake a little further away. They had a tradition that when they did that, each one would take a turn picking a lake to fish at and not tell the other two until they got there.

The car rumbled along the freeway with Cliff at the wheel. It was his turn to surprise his life long pals. "I will promise you this boys." He said as they pulled out of the driveway. "Today will be a truly unique fishing trip. Truly unique." And he laughed a very strange laugh when he said that.

They listened to old time songs on the radio as they rode along but Charlie and George soon felt lost because they didn't know where they were or where Cliff was taking them. "Hey Cliffy boy, you know where we are going?' Charlie teased him from the passenger seat poking George who was in the front seat with Cliff.

"Oh I know, trust me, I know very well where we are going and what we will find when we get there." Both of his pals just stared at Cliff when he said that because he said it in a very spooky way. Finally, Cliff turned the car off of the main road and started up a country road and then off of it on to a dirt road so his friends felt sure they must be close to this mysterious fishing spot. But then, just before they topped a very tall hill, Cliff pulled over to the side of the road, stopped the car and got out.
"Hey what's going on Cliff?" George said getting out with Charlie right behind him. "This can't be the place can it?" "It's the place." Cliff said staring at the top of that big hill.

"But Cliff, I was looking at the map and there isn't a lake anywhere near here. What's going on?" Charlie asked puzzled.

"Well, first we are going to go over that hill. But we aren't taking the car, we are going to walk." Cliff said mysteriously.

"Should we take our rods and tackle?" George asked.

"Nope, won't need them. Not for what we will meet over that hill." Cliff said with a grin on his face.

"Ok, I have about had it with all the mystery Cliff." Said Charlie angrily. "What are we going to meet on the other side of that hill?"

"God." Was the one word answer.

"God?" bothfriendsquestioned.

"Yep, God." Was the answer.

"Just over that hill. God is there. And what is He doing there?" George continued.
"Waiting for us. It's our time. When we walk over that hill, we all meet God. Not in a Sunday school way. We will see him, hear him and meet him face to face. God. Just over that hill. Let's go." And Cliff turned to walk up to the top of the hill.

"Wait a minute, wait a minute." Charlie touched Cliff's shoulder to stop him from leading them to the other side. "What do you mean, 'meet God'? Do you mean we are going to die on the other side of the hill?" he said with fear in his voice. "Well, I don't think so." Answered Cliff. "One way to find out though is go over the hill and meet God. Ready?" "No, no, no, no, no. This is crazy Cliff. People don't just walk up to Godand meet him?" George objected.

"Sometimes they do. Today we will. Come on, let's go." Said Cliff. "Hold it, hold it, hold it." Charlie complained. "Doesn't this sound a

little crazy to you? We don't want to do anything crazy here." "I don't know Charlie." George said thoughtfully. "If God is really just over that hill, it would be crazy not to go meet him. Sure, Cliff, I'll go, lets check it out." And George and Cliff both started up the hill. "Coming Charlie?" George called back to his friend. . "Wait, please, wait." Charlie said sweat bursting from his brow and tears forming in his eyes.

"What's the problem pal?" George said as he and Cliff approached Charlie, worried about him.

"I can't do it. I can't meet God today!" the panic stricken Charlie said frantically. "I have, well, some sins. They are hidden. And they are bad. I can't meet God."

"But God knows about your sins already Charlie." Cliff explained. "And he is ready to forgive you and offer you his friendship. It's just over that hill Charlie, complete forgiveness because of what Jesus did for us on the cross and friendship with God. You want that don't you, Charlie?

"Yes, well, no, well, maybe. I don't know. I am scared Cliff. I can't. I am sweating. I feel faint. I might throw up. Please, don't make me go George. Maybe next time. Yeah, that's it. You guys go. Tell God I will come next time. When I get a chance to clean up my heart. Tell him for me. You will do that for me, won't you Cliff? George?"

Charlie's friends helped him find a seat on a fallen tree near there and gave him some water to help him calm down. "Ok Charlie. Sure, we will tell him. You just stay here with the car." And at that, Cliff and George turned and walked up the hill. Charlie watched him feeling awful inside. So many questions raced through his mind. What if there isn't another time? What if I die before I make myself right with God? He considered running after them but then they disappeared over the crest

and they were gone. Charlie just put his face in his hands and wept. He didn't have the wouldn't go. courage to run to God's arms and be saved and now it was too late. And all because Charlie .


**"It is not the healthy who need a doctor, but the sick. But go and learn what this means: 'I desire mercy, not sacrifice.' For I have not come to call the righteous, but sinners "[Matthew 9:12-13].**

**Diniya Sunshine.**

## CHILDREN'S PLACE

### Children show your talent






## <u>CHILDRENS' QUIZ FOR THE MONTH</u>

THE GOSPEL ACCORDING TO LUKE (21 to 24)

1. How a poor widow can put offertory more than rich?

a) Copper is costlier than Gold that time.

b) Rich people do not offer anything

c) Poor widow gave gift out of her wealth

d) Poof widow put in all she had to live on out of her poverty

2. Heaven and earth will pass away, but ____________ will by no means pass away.

a) My wealth

b) My words

c) Moon

d) The temple at Jerusalem

3. Who entered and made Judas, to betray Jesus?

a) Evil spirit

b) Chief Priests' words

c) Money

d) Satan

4. Simon Peter told to Jesus, "Lord I am ready to go with You,both to prison and to death". But actually what he did?

a) Carried the cross

b) Went with Him to prison

c) Went with Him and died on the cross

d) Denied three times before rooster's crow

5. How Judas did betrayed Jesus Christ?

a) With a hug

b) With a kiss

c) Showing a sword at Son of Man

d) Indicating Him from a long distance

6. Which is the exact place of crucification?

a) Calvary

b) Jerusalem

c) Galilee

d) Mount of Olive

7. In which language "This is the King of the Jews" – inscription was written over the cross of Jesus?

a) Greek

b) Latin

c) Hebrew

d) All of the above

8. Who said "Certainly Jesus was a righteous Man" after seeing His death?

a) Pilate

b) Centurion
c) Mother Mary
d) Judas

9. What was the first sentence spoken by Jesus when He stood in the midst of Eleven Disciples?
a) Why are you troubled?
b) Behold My hands and My feet, that it is I myself
c) Amen
d) Peace to you

10. What was the reaction of the 11disciples after Jesus was carried up into heaven?
a) Great Joy
b) Wept Bitterly
c) Worried about their future
d) Terrified and frightened.

******************************

## March Answers:

1. c) God and Money.
2. d) To dip Lazarus finger in water and cool his tongue.
3. d) All of the above
4. c) Within you.
5. d) Because he who humbles himself will be exalted
6. b) One should receive the kingdom of God like a little child
7. a) He came down at once and welcomed him gladly.
8. b) House of prayer.

9. a) Give to Caesar what is Caesar's and to God what isGod's.

10. d) Some of the Sadducees.

## Children who answered correctly:

1. *Annlin Sophia Nelson*
2. *Diniya Sunshine*
3. *Easterine Benedicta Raj*
4. *Earline Bernice Raj*
5. *Roshan Ravindra*
6. *Jonathan Asher*
7. *Jeremiah Alan*
8. *Jemima Ashni*
9. *Gain George Rose*
10. *Geovin George Rose*
11. *Angelin Sophia Nelson*
12. *Dennis Roger*
13. *Jesvin Selvakumar*
14. *Johan Sanjo*
15. *Shelbino Paul*
16. *Mervin Samuel*
17. *Naveen*

***Congrats you have done a wonderful job !!***

# வேத வினா விடைப் போட்டி – ஏப்ரல் 2018

(நீதிமொழிகள் 1 முதல் 15 முடிய)

1. வாது எதனால் உருவாகிறது?
2. அறிவு புத்தி இவற்றின் உறைவிடம் யாது?
3. கர்த்தருக்குப் பயப்படுவதால் நாம் எதிலிருந்து தப்பித்துக்கொள்ளலாம்?
4. ஞானிகளின் வார்த்தைகளின் ஆழங்களை யாருக்கு அறிந்து கொள்ள முடியும்?
5. உதடுகளை அடக்குகிறவன் யார்?
6. ஞானம், புத்தி இவற்றை எந்த உறவு முறையில் வைத்துக்கொள்ள வேண்டுமென்று சாலமோன் கூறுகிறார்?
7. நீதிமானின் பலன் என்ன?
8. சோம்பேறி எதை மாதிரியாகக் கொள்ள வேண்டும்?
9. எலும்புருக்கி நோய்க்கு சமம் யாது?
10. ஜீவ விருட்சத்திற்கு நிகராவது யாது?

குறிப்பு: விடைகளுக்குரிய அதிகாரமும் வசனமும் குறிப்பிட்டு இம்மாதம் 20 ம் தேதிக்கு முன் அனுப்பி வைக்கவும்.

**சென்ற மாதத்திற்கான விடைகள்:**

1. இஸ்ரவேலை (135:4)
2. சங்.127:4
3. சங். 150

4. சங். 133:2,3
5. சங்.128:3
6. நீதிமான்கள் சூழ்ந்து கொள்வார்கள் (142:7)
7. பாசான் (136:20)
8. செம்மையானவர்கள்(140:13)
9. சங். 139
10. எக்காளம், வீணை, சுரமண்டலம், தம்புரு, யாழ், தீங்குழல், கைத்தாளம் (150:5)

**கடந்த மாத வேத வினா விடைப் போட்டியில் விடைகள் எழுதியவர்கள்**

1. திருமதி. ஜோனிஷ் ஹெர்சில்
2. திருமதி. சிந்துஜா சதீஷ்குமார்
3. திருமதி. பிப்லின் நெல்சன்
4. திருமதி. ஹெப்சிபாய் நேசமணி
5. திருமதி. ஷகிலா கிரேஷ் ஜஸ்டின்
6. திருமதி. ஜமுனா ராஜன்
7. திருமதி. அனிதா சுரேஷ்
8. திருமதி. அனிதா ஜார்ஜ்
9. திரு . ஜார்ஜ் ரோஸ்
10. திருமதி. ஜெயின் ராஜவேல்
11. திருமதி. ராதிகா செல்வகுமார்
12. திருமதி. ஜெயந்தா ஜாண்
13. திருமதி. எபென் A. பிரசாத்

***Congregation Project (Febrary):***

# வெல்லஸ்லி பெய்லியின்

## இளமை வாழ்க்கை:

1846 -ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 28-ம் தியதி அயர்லாந்து தேசத்தில் பிறந்தார். இவரது 20-ம் வயதில் அயர்லாந்து தேசத்தின் பஞ்சதத்தின் காரணமாக ஆஸ்திரேலியா சென்று நன்கு சம் பாதிக்க முடிவு செய்தார். பனி மூட்டம் காரணமாக அவர் சென்ற கப்பல் தாமதமானது. “நேரம் கிடைக்கும் பொழுது கட்டாய மாக சபைக்குச் செல்” என்று சிறு வயது தோழி கூறிய வார்த்தை நினைவிற்கு வந்தது. அப்பகுதியில் இருந்த சபைக்கு சென்று ஞாயிறு ஆராதனையில் கலந்து கொண்டார். அன்று கர்த்தர் தன்னோடு பேசுவதை உணர்ந்தார். ஏசாயா 42 : 16 பெய்லியை அதிகமாய் அசைத் தது. மேக மூட்டம் கலைய ஆஸ்திரேலியா புறப்பட்டார்.



Mr. Wellesley C. Bailey

BORN: 1846, IRELAND
DIED: 1937
MISSION LAND: INDIA

## இந்தியா பயணம்::

ஆஸ்திரேலியாவில் இரு வருடம் கடுமையாக உழைத்தும், இலாபம் காண முடியவில்லை. ஏமாற்றத்துடன் அயர்லாந்து திரம்பினார். தன்னை கிறிஸ்து அவரது பணிக்காய் முன் குறித்துள்ளார் என்பதை உணர்ந்தார். பின்னர், அமெரிக்கன் பிரிஸ்பிட்டேரியன் மிஷனில் (American Presbyterian Mission) சேர்ந்தார். பஞ்ஞாப் மாநிலத்தில் ஆசிரியப்பணி செய்யுமாறு உத்தரவு

பெற்று இந்தியா வந்து சேர்ந்தார். அந்நாட்களில் இந்தியா வில் தொழு நோய் அதிக அளவில் பரவி இருந்தது. அதுவரை தொழு நோயாளிகளைப் பற்றி வேதத்தில் மட்டுமே வாசித்திருந்த பெய்லி சூம்பின கையோடும், முகம் முழுவதும் புண்களோடும், குருடர்களாகவும் இருந்த மக்களைக் கண்டு வேதனை யடைந்தார். இம்மக்களின் வாழ்கையை சீர் படுத்த இயேசு தம்மை தெரிந்து கொண்டிருப்பதை தெளிவாக உணர்ந்தார் பெய்லி.

## தி லெப்ரஸி மிஷன் ( The Leprosy Mission) மலர்தல்:

1975-ல் **"தி லெப்ரஸி மிஷன்"** என்று தொழு நோயாளிகளின் தேவைகளை அறிந்து அவர்களைப் பாது காக்கும் அமைப்பை தொடங்கினார். நாளடைவில் பர்மா, சீனா, ஜப்பான், தென் அமெரிக்கா, தென் ஆப்ரிக்கா, சுமத்ரா தீவுகள் மற்றும் கொரிய நாடுகளில் விரிவடைந்தது. தேவனின் சித்தத்திற்கு செவி சாய்த்து நடந்ததால் தேவன் அவரை உலகம் போற்றும் அளவில் உயர்த்தினார். 50 வருடத்திற்கும் அதிகமாக தொழு நோயாளிகளுக்காக உழைத்த பெய்லி 1937-ம் வருடம் 99 ஆம் வயதில் இறைவனது விண்ணரசில் சேர்ந்தார்.

**சாதனை:**

18-ம் நூற்றாண்டில் உலகத்தில் 15 மில்லியனாக இருந்த தொழு நோயாளிகளின் எண்ணிக்கை 19-ம் நூற்றாண்டில் 2 மில்லியனாக குறைந்தது. இக்காப்கங்கள் இன்றும் செயல்படுகிறது.

நாமும், நம்மை அற்பணிப்போம் கிறிஸ்துவுக்காய். ஆமேன்

- **Jonish Herchil**

# Worship Timings –April 2018

## Main Worship Hall – Oasis Hospital Campus, Al Ain.

| | | |
|---|---|---|
| First and Third Fridays | 7:00 PM | Communion Service |
| Second & Fourth Fridays | 7:00 PM | Regular Service |
| First and Third Fridays | 6.30 PM | Men's Prayer |
| Second & Fourth Fridays | 6.30 PM | Bible Study |
| Every Friday | 6.15 PM | Junior Church |

## REGULAR MINISTRIES @ PERSONAGE – Jahli

| | | |
|---|---|---|
| First Friday | 11:00 AM | Fasting Prayer |
| Second & Fourth Saturdays | 07.00 PM | Gospel Ministry |
| Third Saturday | 07.30 PM | Women's Prayer |
| Last day of the Month | 11.30 PM | Month End & Beginning Prayer |

## SPECIAL PRROGRAMS SCHEDULED

**உயிர்த்தெழுந்த திரு நாள் ஆராதனை**

*(Easter Service)*

***01-04-18 @ 0730 PM in Main Hall***

**பத்தாவது சபை நாள் சிறப்பு ஆராதனை**

*(10th Church Day Special Service)*

***06-04-18 @ 0700 PM in Main Hall***

**பெண்கள் ஐக்கிய சங்க ஆராதனை**

(Women's Felloship Service)

***13-04-18 @ 0700 PM in Main Hall***

*******************

## WEDDING ANNIVERSARY –April 2018

| | | |
|---|---|---|
| 10-Apr | Mr.Bhaskar Rajaram<br>Mrs.Angelin Nalini | |
| 13-Apr | Mr.Selvakumar<br>Mrs.Bavani Selvakumar | 050 838 6851 |
| 19-Apr | Mr.Nelson Sopitha Raj<br>Mrs.Biblin Christble Nelson | 055 602 8865 |
| 26-Apr | Mr.Melbin Paul<br>Mrs.Shally Jesie Melbin | 056 394 1817 |



# BIRTHDAY CELEBERANTS - April 2018

| | | | |
|---|---|---|---|
| 1 | 2-Apr | Mr.Blessin Paul | 050 573 7096 |
| 2 | 6-Apr | Mr.Herchil Harish | 050 324 5774 |
| 3 | 9-Apr | Mr.A. Yobu | 055 832 8701 |
| 4 | 9-Apr | Mrs.Princy Ashok | 055 789 6267 |
| 5 | 13-Apr | Mrs.Prema Ruth.T | 050 850 7652 |
| 6 | 14-Apr | Mrs.Angel Christopher | 056 710 5082 |
| 7 | 17-Apr | Miss.Diniya Sunshine | 050 449 1769 |
| 8 | 17-Apr | Dr.Shelly Kurian | 056 1932532 |
| 9 | 28-Apr | Mr.Santhosh Kumar.M | 056 875 2723 |
| 10 | 30-Apr | Mr.Mohana Kumar.R | 050 141 2529 |
| 11 | 30-Apr | Sherin Shah Selvistor | 055 931 8750 |



# Avoid Gossip

"Besides, they get into the habit of being idle and going about from house to house. And not only do they become idlers, but also gossips and busybodies, saying things they ought not to."
1 Timothy 5:13

On June 10, 1929, the New York Daily Mirror hired Walter Winchell to be the first syndicated newspaper gossip column. Using his connections in the entertainment, social, and governmental circles, Winchell exposed exciting or embarrassing information about celebrities in those industries. Throughout the 1930s and 1940s, Winchell was also an outspoken supporter of civil rights. However, in the 1950's, he supported Senator Joseph McCarthy and he had some people "blacklisted" from working in Hollywood because he suspected them to be communists.

He was feared as a journalist because he often used rumors to blackmail his enemies. He was ruthless and arrogant in his quest to produce gossip.

However by 1970, Winchell had become a recluse in the Ambassador Hotel in Los Angeles. Columnist Larry King wrote of Winchell: "He was so sad. You know what Winchell was doing at the end? Typing out mimeographed sheets with his column, handing them out on the corner. That's how sad he got. When he died, only one person came to his funeral: his daughter."

Gossip is a sin. Today in prayer, confess any sin of gossip in your life to the Lord and seek to refrain from listening and spreading gossip.

"Have you heard of the terrible family They,
And the dreadful venomous things They say'
Why, half the gossip under the sun,
If you trace it back, you will find begun

In that wretched House of They." - Ellen Wilcox Wheeler

God's Word: "A gossip betrays a confidence, but a trustworthy man keeps a secret." – Proverbs 11:13

*Ceciliya Rajkumar*

# MARY MAGDALENE

The role of Mary Magdalene in Christ's resurrection began from her very first appearance in the Gospels. She became a tenacious follower from the time Jesus exorcised seven demons from her (Luke 8:2, Mark 15:41). Perhaps of a wellborn family, she, with other women of wealth, expressed appreciation to Jesus through their generous financial support. They accompanied Him and His disciples as often as their family and social obligations permitted. Her emotional and spiritual attachment to Jesus naturally strengthened as time passed. However, any innuendo suggesting a physical relationship between them is flagrant blasphemy of God's Son, who recognized only a spiritual family (Mark3:31-35). Mary Magdalene's role in Christ's resurrection grew by her devotion to Jesus during His six hours on the cross. Following the entourage from Jerusalem, she remained on site until His death (Matthew 27:55-56). That aside reeks of integrity, given the ferocious loyalty with which women have always supported the spiritual llife.

Mary Magdalene's role in Christ's resurrection became certain by her, and the other women's, loyalty to Christ's corpse. They accompanied Nicodemus and Joseph of Arimathea to the garden and sat opposite the tomb as the man lovingly placed the precious body inside. With the rest, they plunged into grief-stricken despair as servants rolled the stone in place (Matthew 27:61). Devastated beyond tears, they returned home to prepare spices and perfumes to embalm the body after the Sabbath (Luke 23:55-56).

Mary Magdalene's role in Christ's resurrection became inevitable when she and other women took their spices to the tomb at dawn Sunday morning. Their remarkable action-adding to the rich man's superfluity of seventy-five pounds their own store of spices-proved that love can never do enough for its object.

Mary Magdalene's role in Christ's resurrection reached its ultimate expression in her personal rendezvous with Jesus at the tomb (John 20:10-18). However, it seems that the meeting revealed more than the emotional, sentimental message of the hymn *In The Garden.* Luke 24:1 and the following verses record their initial visit to the tomb, where the angels questioned their search for the LIVING among DEAD mortals. In a monumental distinction, they specifically spoke of Christ's bodily resurrection – not the removal of His corpse from the tomb. They even underscored it by referring to Christ's promise of resurrection. The women's *remembrance* of Christ's words obviously didn't translate into understanding. Leaving the tomb, the women told all the apostles generally (Luke 24:9), and Peter and John particularly (John 20:2), that THEY, that is, the angels, had taken Christ's body, but no one knew where. The energized John and Peter raced for the tomb (John 20:3-9). After inspecting it, they left. John 20:10 recorded Mary Magdalene's return to the tomb after the men left. Nevertheless, despite angelic eyewitness affirmation of Christ's resurrection, Christ's promise to rise, and her witness to that, Mary stood outside the tomb, weeping. She forlornly bent over and looked inside, where her adjusted eyes saw two angelic beings and heard their assurance of Christ's resurrection. Jesus meanwhile appeared, stood close to Mary and asked the reason for her tears. Drawn to the voice, she turned to see; but temporarily blinded by weeping and the bright morning light, she didn't recognize Jesus. Only when He called her name did Mary KNOW that Jesus lived and stood beside her Mary's reluctance to accept the Master's resurrection reflected the adamant skepticism in every disciple. And while the empty tomb raised questions and

hopes, it took the personal, visible appearance of Jesus to convince the disciples, Mary Magdalene included. This is evidence of integrity. The hard-headed men and women in that generation weren't interested in believing an illusion. Jesus had to indisputably prove that He lived after being buried. In another mark of integrity, once He proved it, they believed it with a dogged perseverance they never surrendered.

## செயலரிடமிருந்து.......

**கி**றிஸ்துவுக்குள் மிகவும் அன்பானவர்களே! இயேசு கிறிஸ்துவின் இணையற்ற நாமத்தில் உங்கள் யாவருக்கும் என் அன்பின் வாழ்த்துக்களை கூறிக்கொள்கிறேன். கடந்த மார்ச் மாதம் முழுவதும் கிருபையாய் நம்மை காத்து வழி நடத்தி இந்த ஏப்ரல் மாதத்தை காணச் செய்த தேவனுக்கு துதி ஸ்தோத்திரங்களை ஏறெடுப்போம்.

கடந்த மாதத்தில் நடைபெற்ற ஒவ்வொரு ஆராதனையும் நமக்கு ஆசீர்வாதமாக அமைய தேவன் கிரபை செய்தார். குறிப்பாக கடந்த மாதம் நடைபெற்ற விடுமுறை வேதாகமப் பள்ளி (VBS) நம் பிள்ளைகள் அனைவருக்கும் ஆசீர்வாதமாக அமைந்தது என்று நம்புகிறேன். இதில் உற்சாகத்துடன் கலந்து கொண்ட ஒவ்வொருவருக்கும் நம் நன்றிகளை உரித்தாக்குவோம். அந்த நாட்களின் VBS Diretor ஆக செயல் பட்ட Pr.George அவர்கட்கும், அவர்கள் நம் மத்தியிலே வந்து இந்த ஊழியத்தை செய்ய எல்லா ஏற்பாடுகளையும் செய்து தந்த அபுதாபி திருச்சபை செயற்குழு அங்கத்தினரும் நாம் நன்றி கூற கடமை பட்டிருக்கிறோம்.

ஆது போல புனித வெள்ளி (Good Friday) ஆராதனையில் சிறப்பு செய்திகளைப் பகிர்ந்து, அந்த ஆராதனையை ஆசீர்வாதமாக்கித் தந்த அபுதாபி போதகர்

Rev. ஜேம்ஸ் பால்ராஜ் (Rev.James Paul Raj) மற்றும் உம் அல் குவைன் போதகர் சுநஎ. ஜெபவாசகர்(Rev. Jebavagar) போதகரம்மா Rev. ஒலிம்பா ஜெபவாசகர் (Rev. Olymba Jebavasagar) ஆகியோருக்கும் நம் நன்றிகளை கூறுவோம்.

மேலும் இந்த ஏப்ரல் நாம் நடத்த திட்டமிட்டுள்ள நமது திருச்சபையின் 10–ம் ஆண்டு நிறைவு ஸ்தோத்திர ஆரா தனை மற்றும் வருடாந்திர பொதுக்குழுக் கூடுகை ஆகி யவை சிறப்பாய் நடைபெற ஜெபிப்போம்.

அது போன்று தொடர்ந்து வரும் நாட்களின் எல்லா ஊழியங்களிம் இணைந்து செயல்படுவோம். தேவன் நம் ஒவ்வொருவருக்கும் அப்பேர்பட்ட வாய்ப்பினை அருள்வாராக.

*M. நேசமணி.*



**DAILY BIBLE READING April - 2018**

"Your word is a lamp to my feet and light for my path path" Ps.119:105

| | | | |
|---|---|---|---|
| 1 | SUN | Psalm 1- 2 | Leviticus 4 |
| 2 | MON | Psalm 3 - 4 | Leviticus 5 |
| 3 | TUE | Psalm 5 - 6 | Leviticus 6 |
| 4 | WED | Psalm 7 - 8 | Leviticus 7 |
| 5 | THU | Psalm 9 | Leviticus 8 |
| 6 | FRI | Psalm 10 | Leviticus 9 |
| 7 | SAT | Psalm 11 -12 | Leviticus 10 |
| 8 | SUN | Psalm 13 - 14 | Leviticus 11 - 12 |
| 9 | MON | Psalm 15 - 16 | Leviticus 13 |
| 10 | TUE | Psalm 17 | Leviticus 14 |
| 11 | WED | Psalm 18 | Leviticus 15 |
| 12 | THU | Psalm 19 | Leviticus 16 |
| 13 | FRI | Psalm 20 -21 | Leviticus 17 |
| 14 | SAT | Psalm 22 | Leviticus 18 |
| 15 | SUN | Psalm 23 - 24 | Leviticus 19 |
| 16 | MON | Psalm 25 | Leviticus 20 |
| 17 | TUE | Psalm 26 - 27 | Leviticus 21 |
| 18 | WED | Psalm 28 - 29 | Leviticus 22 |
| 19 | THU | Psalm 30 | Leviticus 23 |
| 20 | FRI | Psalm 31 | Leviticus 24 |
| 21 | SAT | Psalm 32 | Leviticus 25 |
| 22 | SUN | Psalm 33 | Leviticus 26 |
| 23 | MON | Psalm 34 | Leviticus 27 |
| 24 | TUE | Psalm 35 | Numbers 1 |
| 25 | WED | Psalm 36 | Numbers 2 |
| 26 | THU | Psalm 37 | Numbers 3 |
| 27 | FRI | Psalm 38 | Numbers 4 |
| 28 | SAT | Psalm 39 | Numbers 5 |
| 29 | SUN | Psalm 40 - 41 | Numbers 6 |
| 30 | MON | Psalm 42 - 43 | Numbers 7 |